விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : M.R.வசந்தி

ந.க.எண்: 5915/ 2025/ எப்1 **நாள்.07.11.2025**

பொருள் :	மனைப்பிரிவு – விழுப்புரம் நகராட்சி – பாணாம்பட்டு கிராமம், சர்வே எண்.39/2A1, 39/2A2, 39/2B, 39/3, 41 –ல் 2.30 ஏக்கர் அல்லது 9301 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக	
பார்வை :	1.	உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, விழுப்புரம். அவர்களின் திட்ட அனுமதி உத்திரவு ந.க.எண்.D55HK910/2025/TCP நாள்.05/07/2025
	2.	அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019
	3.	அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள். 09.12.2020
	4.	அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை , நாள். 16.07. 2022
	5.	நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 12843 / 2022 /டி பி 2, நாள். 20.10.2022
	6.	நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 12843 / 2022 /டி பி 2, நாள். 01.08.23
	7.	உள்ளாட்சி உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் மற்றும் சாலை ஒதுக்கீடு இடம் நகராட்சிக்கென ஒப்படைக்கப்பட்டுள்ள தான பத்திரம் எண். 4531/2025, நாள்.02.07.2025
	8.	இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைப்பிரிவு அனுமதி கட்டணங்கள் ரூ.4,50,000 இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டு இரசீது இணைத்துள்ளார். இரசீது எண்: 044/CP/25-26/0004513, நாள்: 06.11.2025
	9.	நகரமன்ற தீர்மான எண்.1168, நாள்: 17.10.2025
	10 .	உத்தேச 45 குடியிருப்பு மனைகளுக்கான காலிமனை வரி மொத்தம் ரூபாய் 43,864/- செலுத்தப்பட்டுள்ள பற்றுச்சீட்டு எண்கள். 044/VM5/2/25-26/0010584 முதல் 044/VM5/2/25-26/0010643 வரை (45 எண்கள்), நாள்: 05.11.2025

******

உத்தரவு :-

விழுப்புரம் நகராட்சி, பாணாம்பட்டு கிராமம், சர்வே எண்.39/2A1, 39/2A2, 39/2B, 39/3, 41-ல் 2.30 ஏக்கர் அல்லது 9301 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு துறையால் ம.வ/ந.ஊ.இ.எண்.152/2025, எண்ணிட்டு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க நகர மன்ற தீர்மான எண்.1168, நாள்.17.10.2025-ல் நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் மூலை முடக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2846.165 சதுரமீட்டர் பரப்பளவிலான இடமும் TANGEDCO உபயோகத்திற்கான 32.96 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கென 36.55 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும் ஒதுக்கீடு செய்து 45 குடியிருப்பு மனைகளாக பிரித்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/.ந.ஊ.உ.இ.(வி.மா).எண்:152/2025 என எண்ணிட்டு பார்வை 1 - ல் குறிப்பிட்டுள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, விழுப்புரம் அவர்களின் திட்ட அனுமதி உத்திரவு ந.க.எண்.D55HK910/2025/TCP நாள்.05/07/2025-ல் திட்ட அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளது. இம்மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் மூலைமுடுக்குகள் 2846.16 சதுரமீட்டர் இடமும், TANGEDCO உபயோகத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 32.96 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும், மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கான 36.55 சதுரமீட்டர் பரப்பளவுள்ள இடமும் தான பத்திரம் எண். 453/2025, நாள்.02.07.2025 - ல் பதிவு செய்து மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டுள்ளது.

நடப்பில் உள்ள விதிமுறைகளின்படி இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளது.

மனை பரப்பளவு	கூராய்வு கட்டணம்		பராமரிப்பு வைப்பு தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ.100000/- வீதம்	மனைப் பிரிவு அனுமதி கட்டணம் மற்றும் Lumppsump தொகை ரூ.	மனை உட்பிரிவு கட்டணம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5,000	கொடி நாள்	மொத்தம் ரூ.
	மனைக்கு ரூ.1000/- வீதம்	ச.மீ-க்கு ரூ.1.50					
9301 ச.மீ	ரூ.45,000/- நகராட்சி கருவூலம்	ரூ.15,000/- நகராட்சி கருவூலம்	ரூ.3,00,000/- நகராட்சி கருவூலம்	ரூ.60,000/- நகராட்சி கருவூலம்	ரூ.15,000/- நகராட்சி கருவூலம்	ரூ.15,000/- நகராட்சி கருவூலம்	ரூ.4,50,000 /- நகராட்சி கருவூலம்

பார்வை 2 முதல் 6 – ல் குறிப்பிட்டுள்ள அரசாணைகள் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தவாறு மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கவும், மனைப்பிரிவிற்கு நகராட்சி ஒப்புதல் அளிக்கவும் மன்ற அனுமதி அளிக்க வேண்டி பொருள் வைக்கப்பட்டது. இதனையடுத்து பார்வை 9 – ல் குறிப்பிட்டுள்ளவாறு நகர்மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 10 – ல் குறிப்பிட்டவாறு உத்தேச 45 குடியிருப்பு மனைகளுக்கான காலிமனை வரி மொத்தம் ரூபாய் 43,864/- செலுத்தப்பட்டுள்ள பற்றுச்சீட்டு எண்கள். 044/VM5/2/25-26/0010584 முதல் 044/VM5/2/25-26/0010643. வரை (45 எண்கள்), நாள்: 05.11.2025.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் உதவி இயக்குநர், மாவட்ட நகர்ஊரமைப்பு துறை, விழுப்புரம் அவர்களின் திட்ட அனுமதி உத்திரவு ந.க.எண்.D55HK910/2025/TCP நாள்.05/07/2025 – ல் மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/.ந.ஊ.உ.இ.(வி.மா).எண்:152/2025 என எண்ணிட்ட தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்நகராட்சியின் அனுமதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

1) மேற்கூறிய அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதி முறைகள் மற்றும் நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம் அவர்களின் உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2) பின்வரும் காலத்தில் தவறான ஆவணங்கள் கொடுத்து மனைப்பிரிவு உத்திரவு பெற்று இருப்பதாக தெரியவரும் பொழுது அனுமதி உத்திரவு ரத்து செய்யப்பட்டு தங்கள் மீது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3) பின்வரும் காலத்தில் மேற்படி மனைப்பிரிவுகளுக்கான அரசு கணக்கு மற்றும் நகராட்சிக்கு செலுத்திய தொகைகள் தணிக்கை செய்யும் போது கூடுதல் தொகை செலுத்த தெரிவிக்கும் பட்சத்தில் தங்களால் செலுத்தப்பட்டுள்ள பராமரிப்பு பணிகளுக்கான வைப்புத் தொகையில் பிடித்தம் செய்துக்கொள்ளப்படும்.

4) தணிக்கையின்போது நிதியிழப்பு குறித்து தணிக்கைத் தடை எழும் பட்சத்தில், தணிக்கையில் தெரிவிக்கப்படும் தொகை தாங்கள் செலுத்த கடமைபட்டவர் ஆகும் .

21/11/25

ஆணையாளர்,
விழுப்புரம் நகராட்சி

பெறுநர்

திரு.சரவணன், பூபதி, சக்திவேல், செந்தில்குமரன்,
நெ.5, திருவள்ளுவர் வீதி,
மீனாட்சி பேட்டை,
புதுச்சேரி. 605 009

நகல் :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், விழுப்புரம் மாவட்டம்.

2. நகராட்சி பொறியியல் பிரிவு எழுத்தர் இ 1 , மனைப்பிரிவில் உள்ள சாலைகளை சாலை பதிவேட்டில் பதிவு செய்து, அடிப்படை வசதிகளை பொறியாளர் பிரிவு மூலம் பராமரிக்க தக்க நடவடிக்கைக்கு.

3. வருவாய் ஆய்வர், மனைப்பிரிவில் காலிமனைகளுக்கு வரி விதிப்பு செய்து உள்ளதை தொடர்ந்து வசூல் செய்ய

4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம்.

5. சார்பதிவாளர் இணை –I, சார்பதிவாளர் அலுவலகம், விழுப்புரம்.

6. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம்